<u>2025 நவம்பர் மாதம் 18 – ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>எம் .சி .ஓ .பி. நெம்பர் : 17/2018</u>

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 – ஆம் தேதி செவ்வாய்கிழமை எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW1 நபரின் வாக்கு மூலம்

<u>(1969–ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி)</u> திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | RW1 – அரியநாச்சி |
| தந்தை பெயர்: | கருப்பையா |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தேனி |
| வயது : | 59 |

<u>தேதி : 18.11.2025.</u>

<u>முதல் விசாரணை: –</u>

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தேனி மாவட்டம், சீலையம்பட்டி கிராமம், அம்பேத்கார் காலனியை சேர்ந்த முத்தையா மகன் செல்லத்துரை என்பவருக்கு கடந்த 09.09.2014ம் தேதி கியருடன் கூடிய இருச்சக்கர வாகனத்தை பொதுச்சாலையில் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தாரா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க தேனி, வட்டார போக்குவரத்து அலுவலர் எனக்கு வழங்கிய அனுமதி கடிதம்

அசல் **எ.ம.சா.ஆ.1**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. தேனி மாவட்டம், சீலையம்பட்டி கிராமம், அம்பேத்கார் காலனியை சேர்ந்த முத்தையா மகன் செல்லத்துரை என்பவருக்கு கடந்த 09.09.2014ம் தேதி கியருடன் கூடிய இருச்சக்கர வாகனத்தை பொதுச்சாலையில் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று வழங்கிய சான்று **எ.ம.சா.ஆ.2** –ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**:–

சீலையம்பட்டி கிராமம் என்பது உத்தமபாளையம் தாலுகாவிற்கு உட்பட்ட கிராமம் என்றால் சரிதான். சீலையம்பட்டி கிராமத்திற்கு உத்தமபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகம் வரும் என்று சொன்னால் உத்தமபாளையம் மோட்டார் வாகன பகுதி அலுவலகம் வரும். செல்லத்துரை என்பவர் உத்தமபாளையம் மோட்டார் வாகன பகுதி அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். உத்தமபாளையம் மோட்டார் வாகன பகுதி அலுவலகத்தில் உள்ள விபரங்கள் எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.11.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.11.18 18:15:45 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
18.11.2025